# இந்துசாதனம்

விரோதி வருஷம (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ce. P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூச]  யாழ்ப்பாணம்:- நந்தன வூ பங்குனி மீ கக உ செவ்வாய்க்கிழமை (24 March. 1953) [இல - கஉச]


# பிச்சை எடுக்கும் பேதைமை

## இதைநீக்க எளியார் திட்டம் வேண்டும்

ஒரு நாள் நடுப்பகலில் புகைவண்டி நிலையத்திற்குச் சிறிது தொலைவில் ஒரு விசைவண்டி நிலையத்தில் நின்றுகொண்டிருந்தேன். அங்கே பலபேர் விசை வண்டிக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். ஒரு ஏழைப் பெண் ஒரு பச்சைக் குழவியை மடியில் வைத்துக்கொண்டு அங்கே உட்கார்ந்துகொண்டிருந்தாள். அருகிலே ஒரு சிறு பையன் குந்திக்கொண்டிருந்தான். அவன் இரண்டு பாதங்களும் வளைந்திருந்தன. ஆகவே அவனால் நிற்கக்கூடவில்லை. அவனுக்கு வயது இரண்டு இருக்கலாம். பேசவும் இன்னும் தொடங்கவில்லை, கைச்சாடை மட்டும் காட்டும் அறிவுள்ளவனாக இருக்கலாம். பெண்ணோ புகைவண்டி நிலையத்தில் பிச்சை எடுக்கும் பெண்போலத் தோன்றினாள். ஏனெனில் வந்துபோகும் ஆட்களைக் காசு கேட்டுக்கொண்டேயிருந்தாள். பார்வைக்கு மலைநாட்டுப் பெண்போலத் தோன்றினாலும் நல்ல தமிழ் பேசியதால் இந்நாட்டிலேயே வெகுகாலமாகப் பிழைத்து வந்தாள் என்று நினைக்கவேண்டியிருந்தது. வெகு நேரமாகியும் அங்கிருந்தவர்கள் ஒருவரும் ஒருகாசும் அவளுக்குக் கொடுக்கவில்லை. இப்படிப்பட்ட பிச்சைக்காரர்களைப் பெருக்குவதில் பயனில்லை என்று நமது பொதுமக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள் என்று நினைத்தேன். குழந்தைகளின் பரிதாபத்தைக் கண்டுவிட்டு, ஒரு துட்டுக் கொடுக்கலாமென்று என் பையில் கைவிட்டேன். துட்டு இருக்கவில்லை, இரண்டணா தான் இருந்தது. அதனைக் கொடுக்க மனம் வராமல் சும்மா இருந்தேன்.

### பேச்சில்லா நொண்டிப் பிள்ளை

அப்போது ஒரு நடுத்தரப் பெண் வண்டியேற வந்தாள். அந்த நொண்டிப் பையனிடம் உட்கார்ந்துகொண்டு 'நீ யார்; எந்த ஊர்? அப்பா அம்மா எங்கே? என்று நயமாய்க் கேட்டாள். அவன் தெருவையும் தெருவில் பறந்துகொண்டிருந்த விசை வண்டிகளையுஞ் சுட்டிக் காட்டினான், பேச்சு இன்னமும் வாயில்லை. அதைப் பார்த்துப் பிச்சைக்காரத்தாய் இவனுக்குப் பேசவராது கால் நொண்டி என்று சொல்லி அவனை எடுத்து நிறுத்திக்காட்டினாள். அவன் நிற்க முடியாமல் அழுதான். அருகில் இருந்த ஒருவர் ஒரு துட்டு எறிந்தார். அதை அப்பையன் எடுத்துக் கொண்டு அழுகை நிறுத்தினான். உடனே அந்தப் பிச்சைக்காரி தன் கதையைச் சொல்லத் தொடங்கினாள். "அம்மா நான் ஒரு ஏழை. சாப்பாட்டுக்கு வசதி அற்றவள். புகைவண்டி வருகில் இருந்துகொண்டு பிச்சை எடுத்து வயிறு வளர்க்கிறேன். எனக்கு இந்தக் கைக்குழந்தை ஏழு மாதத்திலேயே பிறந்துவிட்டது. இதனை உயிரோடு பாதுகாப்பதே கஷ்டம். இது போதாமல் இன்றுகாலை இந்தப் பரிதாபச் சிறுவனும் வந்து சேர்ந்துவிட்டான். என்ன செய்வது" என்றாள்.

"அப்படியானால் இந்தப் பையன் உன்னுடைய பையன் அல்லவா? அவன் எப்படி வந்து சேர்ந்தான்".

— தொண்டன் —

"அவன் என் பையன் அல்ல. முகசாடை பாருங்களேன். காலையில் ஒரு புகைவண்டி நிலையத்திலே ஒரு திண்ணையிலே இப்பையனை விட்டுவிட்டு யாரோ நகர்ந்துவிட்டார்கள். பையன் தன்னந்தனியே அழுதுகொண்டு இருந்தான். அவனை எவரும் எட்டியும் பார்க்கவில்லை. நானோ ஏழை. குழந்தைகளின் கஷ்டம் எனக்குத் தெரியும். பசியின் கொடுமையை நன்றாய் அறிவேன். கடவுள் இவனையும் வளர்த்துவிடும்படி விட்டுவிட்டான் என்று எண்ணி என்னிடம் இருந்த ஒரு துட்டுக்கு அப்பம் வாங்கிக் கொடுத்தேன். அதைத் தின்றுவிட்டு அழுகை நிறுத்திவிட்டான். பிறகு அவன் என்னை விடவேயில்லை. அவனை எடுத்துக்கொண்டு வந்து இங்கே உட்கார்ந்தேன். உங்களைப்போன்ற தருமவான்கள் ஏதோ காசு கொடுக்கிறார்கள். நான் உண்ணுவதை அவனுக்கும் கொடுக்கலாமென்று இருக்கிறேன்" என்று சொல்லித் தன் கதையை முடித்தாள்.

கேட்டுக்கொண்டிருந்த அம்மா மனம் கசிந்து ஒரு துட்டுக் கொடுத்தாள். அதைப் பெற்றுக்கொண்டு பிச்சைக்காரி நீங்கள் நன்றாக இருக்கவேண்டும் என்று வாழ்த்தினாள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றொரு ஆளும் ஒரு துட்டுக் கொடுத்தான். நானும் கேட்டுப் பரிதாபப்பட்டுக் கையிலிருந்த இரண்டணாவைக் கொடுத்தேன். பிச்சைக்காரியின் சொல்லமுடியாத சந்தோஷம் அப்போது விசைவண்டி வந்தது. நாங்கள் ஏறிச்சென்றோம். அப்பிச்சைக்காரியும் அப்பையனும் என்ன ஆனார்களோ அறியேன். ஆனால் அந்தச் சம்பவம் என்னைவிட்டு நீங்கவேயில்லை.

### பிச்சைக்காரரின் தந்திரங்கள்

பிச்சைக்காரர்கள் தாங்கள் பிச்சை எடுப்பதன்றி வெளியில் பிச்சை எடுப்பதற்காகவே அப்பிள்ளைகளையும் எடுத்துக்கொண்டு பிறருடைய கருணா கடாட்சம் பெறவேண்டி இவ்விதத் தந்திரங்கள் செய்கிறார்கள். இந்தப் பெண் கூறுவது உண்மையானால் அவள் நல்லுணர்ச்சியின் மேலும் செய்யலாம். அல்லது வேறு காரணங்களைக் கொண்டும் செய்யலாம். நல்ல எண்ணம் இருந்தால் நாம் கொடுப்பது சரியே. இல்லாவிடில் நாம் தரும் கொடை வீணே. ஆனாலும் இவர்களிற் பலபேர்கள் எளிதிற் காசுபெற வேண்டிக் குழந்தைகளையோ குருடர்களையோ துணைகொண்டு போவதும் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்விதமாகத் துணைசேர்த்துக் கொள்வதில் பலமுறை ஒழுங்கு தவறி நடப்பதுண்டு. அந்த வகையில் திக்கற்ற குழந்தைகள் பிறக்கிறார்கள். இவ்விதம் உற்பத்தியாகும் குழந்தைகள் தொடக்கமுதல் பிச்சைக்காரர்களாகவே வளர்க்கப்படுகிறார்கள். பெரும்பான்மையாக இவ்வாறு உற்பத்தியாகும் குழந்தைகளுக்கு, பெற்றெடுத்த தாய்தந்தையரின் நோய்கள் ஒட்டிக் கொள்கின்றன. அந்நோய்கள் தீர்மேகம் பொருந்தினதாக இருக்கும். மிகப் பொல்லாத தொழுநோய்கள் ஒட்டிக்கொள்கின்றன. அந்நோய்கள் தீர்மேகம் பொருந்தினதாக இருக்கும். மிகப்பொல்லாத தொழுநோய்கள் (குஷ்டம் கூட) வந்துசேரும். உலக சமூகத்தையே அரித்தெடுக்கும் தொழுநோய்களை இந்த விதமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆகவே, இவ்விதம் மக்களுக்குக் கருணை காட்டிக் காசு கொடுத்துப் பெருக்குவது சரியா என்ற ஒரு கேள்வி நெஞ்சில் எழும்பியது. இவ்விதசங்கடமான நிலை அறிந்துதானோ பாத்திரமறிந்து பிச்சைபோடு என்ற பழமொழியும் எழுந்ததோ என எண்ணினேன். இவ்விதமான எண்ணங்கள் அன்று முழுதும் என் நெஞ்சைத் துளைத்து வருத்திக்கொண்டிருந்தன. பிச்சைக்காரர்களைப் பரிதபிக்க விடுவதா அல்லது குறிக்கொள எண்ணிக் கடிய நெஞ்சராய் இருப்பதா என்பதே அப்போது எழுந்த கேள்வி.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## சடையுளே கங்கை வைத்த சங்கரா!

திருச்சிற்றம்பலம்.

கடவுளேபோற்றியென்னைக் கண்டுகொண் டருளுபோற்றி
விடவுளே யுருக்கியென்னை யாண்டிடவேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை உம்பர்தந் தருளுபோற்றி
சடையுளே கங்கைவைத்த சங்கரா போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.

# காரணப் பேர்பெற்ற காசியிற் பிள்ளையார்

## ஆலயம் புதுக்கி அமைத்திடல் கடனே

இந்த விநாயகர் ஆலயம் பல வளங்களும் சிறந்து மல்கும் யாழ்நகரின் கண்ணே, தெல்லிப்பழை யென்னும் ஊரிலே, வீணைக் கடவை என்னும் திருப்பதியிலே, யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன் துறைக்குச் செல்லும் வழியிலே, தெல்லிப்பழை நாற்சந்திக்கும், மல்லாகம் நாற்சந்திக்கும் இடையே தெருக்கரையோரமாக அமைந்துள்ளது. இக்கோவிலுக்கும் காங்கேயன் துறைமுகத்திற்கும் மூன்றரை மைல் தூரம் வரை உண்டு. இதன் புராதன மகிமைகளைப்பற்றியும், இக்கோவிலுக்குக் "காசியிற்பிள்ளையார்" என்ற திருநாமம்வந்த காரணத்தையும் ஆராய்வதே இச் சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

ஆதிகாலத்தில் ஓர் வயதுபோன அம்மையார் தெல்லிப்பழையிலிருந்து காசியாத்திரையின் பொருட்டுக் காசிக்குச் சென்றதாகவும், அங்ஙனம் சென்ற அம்மையார் பின் வரும்போது ஓர் விநாயகர் லிங்கத்தைக் கொண்டுவந்து வீணைக் கடவை என்னும் காணிக்குள் வைத்துக், "காசியிற் பிள்ளையார்" என நாமஞ்சூட்டி வழிபாடு செய்ததாகவும் அதனாலேயே காசியிற் பிள்ளையார் எனனும் பெயர் வந்ததென்றும் கர்ணபரம்பரைக் கதையாகும். காசியினின்றும் வந்த அந்தணர்கள் கொண்டு வந்ததாகவும் கூறுவாருமுளர். கொண்டு வந்தது யாரேயெனினும் காசியினின்றும் வந்த காரணத்தாலேயே காசியிற் பிள்ளையார் என்னும் திருநாமம் வரப்பெற்றதென்பதை நாம் இடமாக நம்பக்கூடியதாக விருக்கின்றது.

பிரம்மஸ்ரீ. சி. கணேசலிங்க ஐயர்
தெல்லிநகர்

இந்த விநாயகர் ஆலயத்தைப் பற்றி இன்னுமோர் அற்புத சரிதையொன்று காலங்கண்ட முதியோரால் கூறப்படும். அது யாதெனின்? அவ் அம்மையார் இலிங்கத்தை வைத்து வழிபாடு செய்து வரும் நாளில் ஓர் விருட்சம் தானாகவே உற்பத்தியாகிப் பெரிய மரமாக வளர்ந்து வந்ததெனவும் (ஆங்கிலேயர் முதலான) ஏததனையோ நிபுணர்கள் வந்து பார்த்தும் இவ்விருட்சம் எவ்வினத்தைச் சேர்ந்தது? என்று அறிய இயலாது சென்றுவிட்டார்களெனவும், விருட்சத்தின் கீழ் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும்போது அன்பர்களுக்கு வேண்டிய பல வரங்களையும் ஈந்து அளவற்ற அனுக்கிரகங்களையும் புரிந்தாரென்றும் கூறப்படுகின்றது. அதன் பின் அமைக்கப்பட்ட விநாயகப் பெருமானது ஆலயத்தில் ஆகம முறைப்படி நித்திய, நைமித்திகங்கள் வழுவின்றி நடைபெற்று வருகின்றன. பற்பல ஊர்களிலிருந்தும் அன்பர்கள் வந்து விநாயகப்பெருமானை வழிபட்டுத், தம் இஷ்டசித்திகளைப் பெறுவார்கள்.

இக்கோவிற் கட்டடம் தற்போது மிகவும் சேவல நிலையில் இருக்கின்றது. ஆலய வழிபாட்டிற்குச் செல்வோர்க்கும் ஆபத்தை விளைக்குந் தன்மையதாய்க் காணப்படுகின்றது. சைவப் பெருமக்கள்; தெல்லியம்பதிவாழ் தரும சீலர்கள் இதனைக் கண்டும் வாளாவிருப்பது முறையன்று. "திருக்கோயிலில்லாத ஊர் காட்டுக்குச் சமானமாகும்" என்று திருநாவுக்கரசு நாயனார் தமது தேவாரத்தில் பாடியுள்ளார். இங்ஙனம் திருக்கோயில் இருக்கும் பாக்கியத்தைப் பெற்ற நாம் அதனைத் திருத்திச் சீரிய முறையில் நடத்துவது நம்முடைய கடனாகும்.

ஆகவே தெல்லியம்பதிவாழ் சைவப் பெரியோர்களே! அறிஞர்களாகிய பெருமக்களே! தருமசீலர்களே! அனைவரும் அன்புகூர்ந்து ஆலோசித்து இக் காசி விநாயகப்பெருமானின் ஆலயத்தைப்புதுக்கிக் கட்டுதலாகிய சிவகைங்கரியத்தை நிறைவேற்றிக் கும்பாபிஷேகம் செய்து ஆனைமுகத்தண்ணலின் அருளைப் பெற்றுய்வீர்களாக.

"ஐந்து கரத்தனை
ஆனைமுகத்தனை
இந்தி னிளம்பிறை
போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை
ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி
போற்றுகின்றேனே"

(திருமூலர்—திருமந்திரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ பங்குனி மீ
ககஉ செவ்வாய்க்கிழமை

## எங்கள் பத்திரிகை

பொருளாதார நெருக்கடி என்ற பூதம் அரசியல் வட்டாரத்தில் மட்டுமன்று பொதுவாக எங்குமே நடமாடத் தொடங்கி விட்டது. இந்த நிலைமையில் எங்கள் பத்திரிகை,— அறுபதாண்டுகளுக்கும் 'எதுவரினும் எம் பணி குன்றமாட்டாது' என்று ஆணை கூறிவந்த 'இந்துசாதனம்'— இப்பொழுது பொருளாதாரப் பொறுப்பை ஊன்றி ஆலோசித்து ஆவன புரிய வேண்டியதாயிற்று.

வாரத்துக்கு இருமுறை வெளிவந்து சைவப்பணியாற்றி மக்கள் வாழ்க்கைக்கோர் கொழுகொம்பாக இருந்து வந்த இப்பத்திரிகையுமா பொருளிலாப் பேரிடரால் அல்லற்பட வேண்டும் என்று அன்பர்கள் அலமரலாம். ஆனால் இக்கால இயல்பில் நாடகக்கதை, நகைச்சுவை, பரபரப்புக்குரிய செய்தி என்பனவற்றை நாடோறும் கொழித்து வரும் பிரசுரங்களுக்கன்றி நன்னெறி புகட்டும் வெளியீடுகளுக்குப் பொருட்போகம் போதிய தமையாதென்பது காந்திப் பெரியாரால் நிறுவப் பெற்ற 'நவசீவன்' பிரசுர நிலையம் மகாத்மாவின் மறைவுக்குப்பின் பொருளாதார நெருக்கடியிற் பட்ட பாட்டிலிருந்து வெளிப்படையாகும். ஆகலின் பொருள்வருவாய் பற்றிச் சமய தாபன வெளியீடுகள் எவ்வளவு அல்லற்படுகின்றன வென்று நாம் எடுத்துக்கூறவேண்டியதில்லை.

இப்பொழுதுள்ள நிலைமையில் இப் பத்திரிகை வாரத்துக்கொருமுறை வெள்ளி வெளியீடாக ஆறு பக்கங்கள் கொண்டதாக அழகுறப் பிரசுரிக்கப்பட வேண்டிய முடிவை சைவபரிபாலன சபையார் ஒரு விசேட பொதுக் கூட்டத்திலே தீர்மானித்தார்கள். ஆகவே சைவ நன்மக்கள் 'இந்துசாதன' நங்கையின் பணியைத் தெய்வத்தொண்டாகக் கருதி உரிய காலத்தில் உதவ வேண்டிய பொருளை வழங்கிப் பத்திரிகை செவ்வனே நடைபெறச் செய்ய முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கின்றேம்.

---

தொடர் கதை

### ஆச்சரியக் குடிநீர் செய்த அதிசயம்!

### 'நீரர மங்கை' நிலமகளானுள்!!

=O=

# ★ நீரர மங்கையர் ★

— 12 —

அப்போது சூனியக்காரி கூறுவள். "உன் அழகிய உடலம், அன்னநடை, அகத்தினழகைக் காட்டும் கூரிய கண் இவையெல்லாம் உனக்குப் போதாவா? ஓர் ஆடவன் உள்ளத்தைப் பிணிப்பதற்கு இவற்றைத் தவிர வேறென்ன வேண்டும்? என்ன ஆலோசனை? உன் மனத்திடமெல்லாம் இவ்வளவோடு நின்றுவிட்டதா? சொல்லு. நாக்கை நீட்டு! என் குடிநீருக்கு விலை மாற்றாக அதை வெட்டியெடுத்துக்கொள்ளுகிறேன்".

சூனியக்காரி இவ்வாறு கூறியதும் அச்சிறுமி சிறிது ஆலோசித்துவிட்டு, "சரி, யான் நீ கூறுவதற்கு ஒத்துக் கொள்ளுகிறேன்". என்று பதிலளித்தாள்.

ஆச்சரியக் குடிநீர்!

அதன் பின்னர் அந்த ஆச்சரியமான குடிநீரைக் காய்ச்சுவதற்காகச் சூனியக்காரி அடுப்பில் ஒரு சட்டி வைத்தாள். "ஒவ்வொரு காரியத்திலும் யாம் சுத்தமாய் இருந்துகொள்ளுதல் வேண்டும். சுத்தமே யாவற்றுள்ளும் சிறந்தது". என்று சொல்லிக்கொண்டு அருகில் நின்ற ஒரு பாம்பைப் பிடித்து அதை வளைத்து ஒரு முடிச்சுப்போட்டாள். பின்னர் நெருப்பை எரித்துக்கொண்டு அம்முடிச்சாற் குடிநீரைக் கலக்கிக் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்தின் பின்னர் கத்தியினாலே தன் மார்பில் ஒரு காயம் உண்டாக்கி அதினின்று ஒழுகும் இரத்தத்தை அச்சட்டிக்குள் விட்டாள். அப்பொழுது அச்சட்டியிலிருந்து ஒரு விநோதமான புகை எழுந்தது. அதைப் பார்த்தாற் பயங்கரமாய் இருக்கும் அன்றியும் அவள் அடிக்கடி அதற்குள் ஒவ்வொரு சாக்குப் போட்டுக்கொண்டே இருந்தாள். அதன் பின் அக் குடிநீர் கொதிக்கத் தொடங்கியதும் அதிலிருந்து ஆமை அழும் ஓசைபோல் ஓர் ஒலி எழுந்தது. சிறிது நேரத்தின் பின் அடுப்பிலிருந்து அதை இறக்கி வைத்தாள். ஆறியவுடன் அது தண்ணீர்போலத் தெளிந்தது. அப்பொழுது சூனியக்காரி அந் நீரர மகளைக் கூப்பிட்டு, "குடிநீர் காய்ச்சி முடிந்தது! இந்தா, எடுத்துக் கொள், என்று சொல்லி அவள் கையில் அதைக் கொடுத்தனள். அதன்பின் அவளை நோக்கி "நாக்கை நீட்டு, இதனால் அதை வெட்டி எடுக்கின்றேன்". என்று கூறித் தனது கையிலிருந்த ஒரு கூரிய கத்தியினால் அவள் நாக்கை அறுத்தனள். அன்றுதொட்டு அச்சிறுமி பேசவாவது பாடவாவது முடியாமற்போனது.

நாக்கை அறுத்த பின்னர் சூனியக்காரி அவளுக்குக் கூறுவள். "இனி நீ போகலாம். யான் கூறியவண்ணம் யாவற்றையும் தவறாது செய்துகொள். உனது எண்ணம் கட்டாயம் கைகூடும்! அன்றியும், நீ திரும்பி இக் காட்டுக்கூடாகச் செல்லும்போது அரைமா உன்னைப் பிடிக்க முயலும். அதற்கு நீ சிறிதும் பயப்படாதே. அவ்வாறு பிடிக்கத் தம்முடைய கைகளை நீட்டினால் இந்தக் கஷாயத்திற் கொஞ்சம் தெளித்துவிடு. அப்போது அக் கைகள் ஆயிரந் துண்டுகளாய் முரிந்து போம்.

இவை யாவற்றையும் கேட்டுக்கொண்டு சிறுமி சூனியக்காரியின் குடிசையை விட்டுத் திரும்பினுள். அவ்வாறு திரும்பி வரும்போது அவள் கையிலே மின்போல விளங்கிக்கொண்டிருக்கும் அக் குடிநீரை அரைமாக்கள் கண்டன. கண்டதும் அஞ்சி அவை தம் கையை ஒடுக்கிக்கொண்டன, இதனால் அக் காட்டுக்கூடாக அச்சிறுமி ஓர் இடையூறுமின்றி விரைந்து சென்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கள்
இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் ஆக்கியது.

---

# வினையாண்மைவீரன்

## சேனுநாயக தினத்தில் சேர். க. வைத்தியநாதன் சிறப்புரை

இன்றைய தினம் எங்கள் தேசபிதாவாயிருந்து நிடைமான இவ்வுலக வாழ்வை நீத்த பெரியாரின் ஒரு வருஷ முடிவில் வரும் சிரார்த்த தினமாகும். இந்தத் தினத்தில் அவர் உண்டுபண்ணிய தனிச் சிறப்பு வாய்ந்த பாரிய இலங்கையாகிய குடும்பத்தின் பல்வேறு வகுப்பினரும், இனத்தவர்களாக அன்புடன் ஒருங்கு கூடி இறந்தவரின் நற்குண நற்செய்கைகளைப் பற்றிப் பேசுவதும் சிந்திப்பதும் தமிழ் மக்களாகிய எங்கள் வாழ்வில் செறிந்திருக்கும் ஒரு நல்ல வழக்கமாகும்.

அதிகமான DS சேனநாயகா அவர்களுடன் பல நாள் நெருங்கிப் பழகும் பேறு எனக்கு நேர்ந்தமையால் அவரின் குணதிசயங்களைப் பற்றி மணித்தியாலக்கணக்காகப் பேசலாம், எனது மனதில் தோன்றும் விம்பங்களோ பல:

1. சரித்திரங்கண்ட தனிப் பெருந் தலைவன் என்கோ.

2. தன் வாழ்நாளைப் பொதுசன முன்னேற்றத்திற்குத் தியாகஞ் செய்த தேசபிதா என்கோ.

3. இலங்கைச் சுதந்திரத்திற்காக அயர்ச்சலியாது உழைத்த பெரியவர்களுட் பெரியார் எனகோ.

4 சுடலை கருதாத தேசத் தொண்டர்க்குவழிகாட்டி என்கோ,

5 அரசியல் முறையில் வெற்றிக்கொடியை என்றேயும் காட்டும் தகுதிவாய்ந்த இராசதந்திரி என்கோ.

6. மாற்றாரின் பலத்தையும் பலவீனத்தையும் அளந்தறிந்து அதற்கேற்றவாறு சாதுரியமாகக் காரியம் பார்க்கும் ஒப்பற்ற தீரன் என்கோ.

7. தன்னை எதிர்த்தோரையும் தன் வசமாக்கும் மாபெரும் மந்திரத்துவ வல்லுநர் என்கோ.

8. அகில உலகத்திலும் தெரிந்தெடுக்கப்பட்டு, கல்வி, ஞானம், விவேகம், அநுபவம் என்னும் துறைகளில் மேம்பட்ட பெரியார்களுடன் ஒரே சபையில் கலந்து உரையாடித் தன் காரியத்தில் வெற்றிபெறும் வினையாண்மை வீரன் என்கோ.

9. எக்காரியத்தில் இறங்கினாலும் அதையிட்டு வரும் இடரிற் பயமோ துன்பமோ பாராது வெற்றி காணும்வரை உழைக்கும் ஆற்றல் வாய்ந்த அண்ணல் என்கோ.

10. எங்கள் ஜனநாயகத்தின் ஜெயநாயகமாய்த் துலங்கிய சேனநாயகம் என்கோ இன்னும் பலவடிவங்கள் என் மனக்கண்முன் ஒன்றின் மேல் ஒன்றாக நெருங்கித் தோன்றுகின்றன. இவை எல்லாவற்றையும் எடுத்துரைக்கும் வேலை

இது நல்ல இலங்கை மாதாவின் பிள்ளைகளில் ஒரு சாதாரண தமிழ் மக்கள் இப்பெரியார் பயன் கருதாது தங்களுக்கு முன்னர்ச் செய்த பேருதவிகளை இன்று நினைந்துருகுதல் கடமை செய்நன்றியறிதல் எங்களுக்குள்ள சிறந்த பயன்பாடாகும். அது நிற்க, இன்று எங்கள் முதற் பிரதமரை எங்கள் இருதயங்களில் வரவேற்கும் நாளாகும்.

தமிழ் மக்கள் ஒருவரைப் பெரியார் என மதிப்பிடுதற்குத் தமக்குரிய அளவுகோலினை வைத்திருந்தனர், பண்டைத் தமிழ் மக்களின் இரண்டாயிரம் வருடத்துக்கு முன்னுள்ள நாகரிகத்தை விளக்கும் சங்கநூல்களுள் ஒன்று "புறநானூறு" என்பது நீங்கள் எல்லோரும் அறிவீர்கள், அதில் தமிழர்,

"யாதுமூரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... மாட்சியிற்
பெரியோரை வியத்தலுமிலமே
சிறியோரை யிகழ்தலதனினு
மிலமே"

என்னும் சிறந்த இலட்சியத்தை அந்தக்காலத்திலேயே கைக்கொண்டிருந்தார்களென அறிகிறோம். இந்த இயல்பாலும் மற்றும் எங்கள் தனிப்பண்பாடு, சான்றாண்மை முறைகளாலும் எங்கள் முதற் பிரதமரை ஒராற்றான் சிறு அளவை செய்து என் பேச்சைச் சுருக்கி முடிக்க விரும்புகிறேன்

தமிழ் நாட்டை அரசு செய்த சேர சோழ பாண்டியர்களிடம் அவ்வூர்ப் பொதுமக்கள் சென்று தங்கள் குறைகளை எளிதில் நேராக முறையிடும் விதிகளை ஏற்படுத்தினார்கள். அதுபோல் எமது முதற் பிரதமரிடமும் பொது மக்கள் சென்று தங்கள் தங்களுக்குள்ள குறைகளை முறையிடுவது உண்டு. அவைகளையெல்லாம அவர் மிக்க ஆதரவுடனும் அநுதாபத்துடனும் கேட்பார், அவர்களுக்கேற்பட்ட இடர்களைத் தம்மாலானவரை களைந்தார், அப்படிக் களைய முடியாவிட்டாலும் அவர்களுடைய இன்ப துன்பங்களை விசாரித்து ஆறுதலான மறுமொழி சொல்லி அனுப்பி வைப்பார்.

### குறிக்கோள்கள்

இன்னொரு சங்க நூலாகிய பட்டினப் பாலையிலே கரிகாற்சோழன் பெருமையைக் குறிப்பிடுமிடத்து,

"காடு கொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம் பெருக்கிச்
செங்கோல் செலுத்தினுன் என்று கூறப்பட்டிருக்கிறது. இது எங்கள் பிரதமருக்கும் மிகப்பொருத்தமானதே. அதோடு திருவள்ளுவர் வாக்கிற் கமைய,

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்"

என்பதைத் தன் வாழ்விலேயே காட்டினுர். ஆனால் அவர் முற்றிலும் பழமையே தழுவி விரும்பியிருந்தவருமல்ல!

"பழையன கழிதலும்
புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே".

என்ற கொள்கையைக் கடைப்பிடித்துப் பல முற்போக்கான காரியங்களைச் செய்துள்ளார். விவசாய விருத்திக்காக பல நவீன யந்திரங்களைத் தருவித்தும் பெண்களையும் தெரிந்தெடுத்தும் விவசாயப் பயிற்சிக்காக வெளிநாட்டுக் கனுப்பியும் ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவியும், இத்தகைய பல செய்தார்.

ஒரு சர்வாதிகாரியின் சக்தியும் செல்வாக்கும் பெற்றிருந்தும், இவருக்கு இடாம்பீகமற்ற சாதாரணமான வாழ்க்கை நடத்துவதிலே தான் அதிக விருப்பங்கொண்டிருந்தார்! ஊண், உடை பாவனை

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

---

திருத்தொண்டர் திருநாள்

### நேச நாயனுர்

21—3—53

நேசநாயனுர், காம்பிலி நகரத்திலே சாலியர் குலத் தலைவராயிருந்து தமது மனதைச் சிவபெருமானது திருவடிக்காக்கி, வாக்கைத் திருவைந்தெழுத்துக்காக்கிக் கையைச் சிவனடியார் தொண்டுக்காக்கி, வஸ்திரமுங் கீளுங்கோவணமுஞ் செய்து சிவனடியார்களுக்குக் கொடுத்து வாழ்ந்து சிவபதமடைந்தார்.

இங்கே நாயனுருடைய சிந்தை சொல் செயல் எல்லாஞ் சிவபிரான்பாலும் சிவனடியார்பாலும் நின்றமையால் அவ்வாறு நிற்றலே அருள் விளைவார் வழியென்பது அறியவருகின்றது.

### கணநாத நாயனுர்

23— —53

சீர்காழியிலே திருத்தோணியப்பருக்குத் தினந்தோறுந் திருத்தொண்டு செய்து தம்மையடைந்தவர்களையும் அவர்களுக்கேற்ற திருத்தொண்டுகள் செய்யப் பயில்வித்து சிவனடியார்களை வழிபட்டு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரை விதிப்படி பூசித்து வந்தார் கணநாதநாயனுர். இப்பூசையின் பயனாய்த் திருக்கைலாச மலையிலே சிவகணங்களுக்கு நாதராயினுர்.

சிவதொண்டு சிவனடியார் தொண்டுகளே நாயனுரின் வாழ்க்கை நெறியினவாக இருந்து அவ்வியல்பிலும் அருள் வாழ்வை ஈந்தன வாகவின்

### முனையடுவார் நாயனுர்

25—3—52

திருநீடூரிலே சிவனடியார் பத்தியிருந்தவராயிருந்து போர்முனையிலே தோற்றவர்களுக்காகப் போர்செய்து பொருள் பெற்று அப்பொருளைச் சிவனடியாருக்காக்கி வாழ்ந்தார் முனையடுவார் நாயனுர். இவர் இத் திருத்தொண்டைச் செய்து சிவபதமடைந்தார்.

சிவனடியார் தொண்டே நாயனுர் சிவபதம் பெறுதற்கு ஏதுவாயது என்பது நாம் குறிக்கவேண்டியது.

அருள் வழியினர்க்கு அதீதநெறியென்பது தெளிபொருளாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் திருநாள்

## என்று எவ்வாறு நடைபெறுவது?

( தமிழ்மறைக் கழகத்தலைவர் எழுதுவது )

வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாக யாம் கொண்டதற்குரிய காரணங்களை அறிதற்கு அன்பர்கள் சிலர் விரும்புகிறார்கள். ஆதலினால் முதலிற் சுருக்கமாகச் சில கூறுதும்.

திருவள்ளுவர் பெருமான் இவ்வுலகிற் றோன்றிய நாளையோ, 'பேரா இயற்கைப் பெருமையே' 'றெய்திய' நாளையோ அறிதற்குப் பொருத்தமான சான்றுகள் இல்லை. அவர் மறைந்த நாளைச் சிலர் மாசி உத்தரம் என்றும் வேறு சிலர் வைகாசி அனுடம் என்றுங் கருதி இவ்விருநாட்களையுங் கொண்டாடி வருகின்றனர். இவற்றுள் ஒரு நாளை உலகம் முழுதுங் கொண்டாடச் செய்வதோடு, அந்த நாளைத் தமிழ் மக்களுடைய வீடுகள் ஒவ்வொன்றிலுங் கொண்டாடவுஞ் செய்யவேண்டும் என்று எமது தமிழ் மறைக் கழகம் முடிவு செய்தது. இதனாலே இவ்விருநாளிலே பொருத்தமான தொரு நாளை அறிவிக்கும்படி. சங்கங்கள் சிலவற்றையும் அறிஞர்கள் சிலரையுங்கேட்டோம்.

திருக்குறளின் உயர்ந்த கருத்துக்களைப் பரப்புவதற்குப் பல்லாற்றானும் தொண்டு செய்து வரும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளர் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் பின்வருமாறு எழுதினார்கள், "அவர் (திருவள்ளுவர்) திருநாள் வைகாசி அனுடம் என்பதுதான் மறைமலையடிகள் போன்றார் கருத்து. அவ்வண்ணமே எங்கள் பஞ்சாங்கத்தில் வெளியிட்டு வருகிறோம். அதைப் பார்த்து வெளியார் சிலர் தங்கள் பஞ்சாங்கத்திலும் அவ்வாறே வெளியிட்டு வருகின்றனர்." திருவள்ளுவர் ஆண்டினையே தமிழர்கள் கைக்கொள்ள வேண்டுமெனக் கூறி அதனை நிலைநாட்டிய பெருஞ் செயலாளர் மறைமலையடிகள் என்பதைத் தமிழ் அறிஞர் யாவரும் அறிவர். மேலும் மயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் கோயிலிலும் வைகாசி அனுடத்தன்றே திருவள்ளுவருடைய நாள் விழாவை (குருபூசையை) நடத்துகிறார்கள். பல வருடங்களாக இந்தியாவிலுள்ள திருவள்ளுவர் கழகங்கள் பல இந் நாளையே திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடி வருகின்றன. இக் காரணங்களாலேயே வைகாசி அனுடத்தை யாம் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாட முடிவு செய்தோம்.

அன்பர்கள் சிலர், இந்த இரு நாளையுங் கொண்டாடினாலென்ன? என்றும், இவற்றுள் ஒருநாளை அவர் தோன்றிய நாளாகவும், மற்றதை மறைந்த நாளாகவுங் கொள்ளுதல்கூடாதோ? என்றும் இந்த இரு நாட்களையும் விட்டு விட்டு, வேறொரு நாளைக்கொண்டாடத் தொடங்கினால் என்ன? என்றும், வைகாசி மாதத்தில் ஒரு நட்சத்திரத்தை ஏன் கொள்ள வேண்டும், ஒரு திகதியைக் கொண்டாலென்ன? என்றும், திருவள்ளுவர் ஆண்டைத் தை மாதம் முதலாம் நாளிலிருந்து கணிக்கிறோம், ஆதலின் அந்த நாளையே கொண்டாடினாலென்ன? என்றும் இன்னும் பலவாறும் எழுதியுளர். இவ்வாறு பல வேறு கருத்துக்களை அறிவித்தாலும் யாம் குறித்த நாளைத் தாமுங் கொண்டாடுவதாகவும், எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்குவதாகவும் அவர்கள் யாவரும் எழுதியுளர். அவர்களுடைய ஒற்றுமைப் பண்பும், திருக்குறட் பற்றும், கடமையுணர்ச்சியும் எமக்கு ஊக்கமளிக்கின்றன. யாம் குறித்த நாளை ஆதரித்து எழுதிய நண்பர்களும் பலராவர். இவர்கள் யாவருக்கும், எமது அறிக்கையினை வெளியிட்ட பத்திரிகைகளுக்கும் நன்றி கூறுகிறோம். எல்லோருக்கும் உகந்ததாக ஒரு நாளைத் தெரிவு செய்தல் முடியாதென்பதைக் காட்டவே அன்பர்களின் கருத்துக்களை ஈண்டுக் குறிப்பிட்டோம். (வரும்)

### சர்வோதய பொதுக் கூட்டம்

புதன் கிழமை மாலை 6 மணி தொடக்கம் (25-3-53) கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் திரு K. நேசையா அவர்களின் தலைமையில் அகில இலங்கைக் காந்தீயசேவாசங்க ஆதரவில் சர்வோதய பொதுக் கூட்டம் நடைபெறுமென்று கொழும்புக் கிளைக் காரியதரிசி அறியத்தருகின்றனர்.

### சுதுமலை அம்மன் கோவிற் குளிர்ச்சி

நிகழும் பங்குனி ௴ 16 உ (29-3-53) ஞாயிற்றுக்கிழமை மேற்படி கோவிலிற் குளிர்ச்சி நடைபெறுமென்று அறிய வருகின்றது. அத்தருணம் அன்பர்கள் இயன்றஉதவிபுரியுமாறு வேண்டப்படுகின்றனர்.

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

### சுன்னாகம் ஐயனார் கோவில்

#### பலி நிறுத்தமும் அன்னதானமும்

ஏறக்குறைய ஒரு மாசத்திற்குமுன் சுன்னாகம் ஐயனார் கோவிலில் கும்பாபிஷேகக் கிரியைகள் சைவசித்தாந்த ஆகம விதிப்படி இந்திய விசேட குருவாலும் இன்னும் இங்குள்ள பல குருக்கள்மாராலும் நடாத்தப்பட்டது. அவர்களினது வேண்டுகோளின் படியும், பல சைவப் பெரியார்களினது வேண்டுகோளின் படியும் ஆலயத்தில் மிருகபலி செய்வது சைவசித்தாந்த ஆகம விதிக்கு மாறுனது எனறு எமது சுன்னாகம் ஐயனார் கோவிலில் வேள்வியிலனறு மிருகபலி இடுவதில்லை எனத் துண்டுப்பிரசுர மூலமாக விளம்பரஞ் செய்துளளேன்.

இதையறிந்த அனேக புண்ணிய சீலர்களும், பல சைவாபிமானிகளும் நேர்முகமாகவும் எழுத்து மூலமாகவும் இப் புண்ணியச் செய்கையைப் பாராட்டினார்கள். கோவிலிற் பலி செய்வதை நிறுத்துவதனுல சைவ அபிமானிகளின் அன்பும், ஆதரவும் ஒத்துழைப்பும், பொருள் உதவியும் இல்லாமல் என்றும் எமது ஐயனார் கோவிலுக்குக் கிடைக்குமென பூரண நம்பிக்கை உடையேன். (வேள்வித் தினத்தன்று அதாவது உகூஉ ஞாயிற்றுக்கிழமை (5 4-53) மிருகபலி நடவாது என்பதைத் திடமாக அறிவிக்கிறேன். அன்று அன்னதானம் கொடுப்பதாக ஐயனின் திருவருளால் தீர்மானித்துள்ளேன். ஆதலின் இப்புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட விரும்பும் மெய்யன்பர்கள் அரிசி, நெல், காய் கனி வகைகள், வாழையிலை ஆதியனகொண்டு வந்து என்னிடம் ஒப்படைத்தும், அனுப்பியும் இப்புண்ணியச் செய்கையை ஆதரித்து ஆர்வங்காட்டி அன்புடன் ஒத்துழைக்குமாறு ஐயனின் திருவருளை முன்னிட்டுத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
சி. பெரியதம்பி
ஐயனார்கோவில்
ஆதீன தர்மகர்த்தா

### யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை

#### விசேஷ பொதுக்கூட்டத் தீர்மானங்கள்

சென்ற ஞாயிற்றுக்கிழமை (20-3-53) நடந்த சைவபரிபாலன சபையின் விசேஷ பொதுக் கூட்டத்தில் (3-4-53 தொடக்கம் இந்துசாதனம் ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் ஆறு பக்கங்களுடன் கிழமைக்கொருமுறையே வெளிவருதல் வேண்டுமென்றும், ஆறும் வகுப்பில் தாய்மொழி மூலம் கல்வியூட்டுமாறு அரசாங்கம் செய்த ஒழுங்கின் விளைவு என்னவென்று தகுதி வாய்ந்த ஒரு ஆராய்ச்சிக் குழுவினரால் ஆராயப்பெற்று அறியும் வரையில் அதனைக் கல்லது என்று அவ்விதமே எழாம் எட்டாம் வகுப்புகளில் தாய்மொழிமூலம் கல்வி பயிற்றப்பெறுதல் வேண்டுமென்றும், சிங்கள நாடுகளிற் கல்வி கற்கும் தமிழப் பிள்ளைகள் தமிழ் படிப்பதற்குத் தகுந்த ஒழுங்கு செய்விக்க வேண்டும் என்றும் திரு. இ. சிவகுருநாதர், Dr. C. குருசாமி, முதலியார் C. முத்துக்குமாரசாமி, Dr. K. இராசா, திரு. அ. அருளம்பலம் ஆகியோர் மந்திரிகளைச் சந்தித்து, இந்த ஆலய அறநிலையச்சட்டத்தைப் பாராளுமன்றம் விரைந்து அங்கீகரிக்கும்படி [illegible] தீர்மானிக்கப்பெற்றது.

### நீரர மங்கையர்

=0=

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ருள். ஒரு கணப்பொழுதில் சேற்று நிலத்தையும் நீர்ச்சுழியையும் கடந்தாள்.

அதன் பின் தனது தந்தையினது மாளிகைக்கு அருகே சென்று அதை உற்று நோக்கினள். அங்கே சாலையில் ஏற்றியிருந்த விளக்கு யாவும் அணைந்துவிட்டன. யாவரும் தூங்கும் நேரமாகையால் விளக்கைக்காண்பது எப்படி? இப்பொழுது அவள் தான் போக முடியா திருப்பதால் அங்கு உட்செல்ல விரும்பவில்லை இனிமேல் அம் மாளிகைக்குத் திரும்பிச் செல்லாது நிலவுலகுக்குப் போவதற்கே துணிந்துவிட்டாள். எனினும் தன் உள்ளத்தில் ஏதோ ஒரு வருத்தம் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. உடனே தோட்டத்திற்கு விரைந்து சென்று தன் சகோதரியரது பாத்திகளில் வளரும் பூக்களிற் கொஞ்சங் கொஞ்சம் பறித்துஎடுத்துக்கொண்டாள். பின்னர் மாளிகையை நோக்கிக் கையசைத்துப் பிரியாவிடை பெற்றுக்கொண்டு கடலூக்கூடாக நீந்திச்சென்றுள்.

#### அரசிளங்குமரனை அடைதல்!

இவ்வாறு நீந்திக்கொண்டு சூரியன் எழுமுன் அரசிளங்குமரனது மாளிகைக் கருகில் வந்து சேர்ந்தாள். வந்ததும் அம் மாளிகையினது வெண் கல்லாற் கட்டிய படிக்கட்டொன்றில் ஏறி இருந்தாள். அப்போது அங்கு நிலா வெகு அழகாய் எறித்தது. பின்னர் அந்தக் குடிநீரை எடுத்துக் குடித்தனள். உடனே அவளது மிருதுவான உடம்பிலே கூரிய வாளினால்வெட்டுவதுபோன்ற வருத்தம் உண்டாயிற்று. அதனால் இறந்தவள்போலக் குப்புறக் கீழே விழுந்தாள்.

இந்த நிலையில் நெடுநேரம் கிடந்தாள். பின்பு கிழக்கே சூரியனது கதிர் சிறிது சிறிதாகத் தோற்றத்தொடங்கின அப்பொழுதே அவளுக்குச் சிறிது அறிவு வந்தது. உடம்பு நோ இன்னும் மாறவில்லை எனினும் மெல்லத் தனது கண்களைத் திறந்து பார்த்தாள். அப்பொழுது தனக்கு முன்பாக அவ்வழகிய அரசிளங்குமரன் தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டு நிற்பதைக்கண்டாள். அதனால் நாணமுற்றுக் கீழே பார்த்தாள். அவ்வாறு பார்த்ததும் தனக்கு மீன்வால் இல்லாது அதற்குப் பதிலாகக் காலிரண்டு இருப்பதைக் கண்டாள்! அவை அழகிய பொன்னிறத்தோடுவிளங்கின. அவ்வளவு அழகிய கால்கள் பெண்கள் யாருக்காவது இருந்ததில்லை. உடனே தான் ஆடையில்லா திருப்பதை அறிந்து நாணமுற்றுத் தனது உடம்பைத் தன் நெடிய கூந்தலால் இழுத்து மறைத்தாள். இப்படி யிருக்கையில் அரசிளங் குமரன் "நீயார்? எங்கிருந்து வந்தாய்?" என்று அவளை வினவினன். அவளோ தனது கரிய நிறமான பெரிய கண்களால் அவனைத் துயரோடு பார்த்தாள். பேச இயலாததினால் அவள் வேறென்ன செய்யமுடியும்? ..... ..... ..... .....

(வளரும்.)

### விநயாண்மை வீரன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யெல்லாவற்றிலும் பொதுமக்களின் முறையையே கைக்கொள்வார். தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் செல்வாக்கையோ—புகழையோ தேடிவைக்க வேண்டுமென்று ஆசைப்படவுமில்லை!

"பெருமை பெருமிதமின்மை" என்பதுபோல, உயர்ந்த குறிக்கோள்களையே தன் வாழ்வில் கடைப்பிடித் தொழுகினார். இன்னும் திருவள்ளுவர் எடுத்துக் காட்டிய, அன்புடைமை ஒப்புரவு கண்ணோட்டம், சான்றாண்மை ஆதியாம் குணங்கள் எங்கள் பெரியாரில் குடிகொண்டிருந்தன. நிரம்பிய சமயப் பற்று இருந்த போதும், மூடநம்பிக்கை, பொய் அபிமானம் கொண்டவரல்ல. இதையே புத்தபகவானுங்கூறியுள்ளார், "சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து" இருஎன்னும்பொருள்படும் புத்தகொள்கையைப்பின்பற்றி நடந்தார். இக்கொள்கைப்படி அவர் தருமநெறி நின்ற ஒரு கர்மயோகி. தனக்குச் சமுதாயத்தில் என்ன வேலை விடப்பட்டதோ அதை நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானம் உடையவர். பிறர் நலத்தையே தன் கருமமாகக் கொண்டு நடந்தவர். சுயநலப் பற்று இல்லாத வீட்டு மனச்சாந்தம் தானாகவே வந்தடைந்தது; சுக துக்கங் கற்றது. வாழ்க்கை முழுவதும் பணிசெய்து கிடப்பதில் அர்ப்பணம் செய்யப்பட்டது.

இத்தகைய பெரியாருடன் சில காலம் உழைக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததும் என் பாக்கியமே!

### பிச்சாடண மூர்த்தி பிரதிட்டா தினம்

சாவகச்சேரி ஸ்ரீ இராசராசேஸ்வரி பேச்சியம்பாள் ஆலயத்துக்கு வடகீழ்ப்பாகத்தில் உள்ள திருக்குளத்தின் அருகே அமைக்கப்பட்டிருக்கும், பிச்சாடண மூர்த்தியின் பிரதிட்டா தினம் நிகழும் நந்தன வருஷம் பங்குனி மாதம் ௧௬ ந் தேதி (29-3-53) ஞாயிற்றுக்கிழமை வழக்கம்போல நடைபெறுமென அறிகின்றோம்.

### பிரான்மலை கவி காந்திதாசன்

இரங்கூன், அகில பர்மா தமிழர் சங்கத்தில் நிகழும் நந்தன ஆண்டு பங்குனி 14ம் நாள் ( 27—3—53 ) வெள்ளிக்கிழமை பிரான்மலை கவி காந்திதாசன் அவர்களின் அறுபதாண்டு நிறைவு நாள் கொண்டாடப்பெறுமென்று அறியவருகின்றது.

### ஞானப்பிரகாச முனிவர் திருநாள்

நாள்:- நந்தன ௵ பங்குனி ௴ ௧௨ ட (25-3-53)புதன்கிழமை
நேரம்:- இரவு 6½ மணி தொடக்கம் — 9 மணிவரை
இடம்:- யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

1. கடவுளாராதனை
2. தமிழ்மறையோதல்
3. 'ஞானப்பிரகாசமுனிவர்' என்னும் பொருள்பற்றி விரிவுரைகள் ஸ்ரீமத். சி. சுப்பிரமணிய தேசிகர், முதலியார் செ. முத்துத்தம்பி,

சைவாபிமானிகள் சமுகமளிப்பார்களாக,

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்

M. 281 21—3—53.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா,
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை.**

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப்பற்றுவரவு.**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.



சூதக வயிற்றுவலி சொல்லாமலே பறக்கும்!

# கர்ப்பஎண்ணெய்சாப்பிட்டால்

மாதவிலக்குக் காலத்தில் உண்டாகிற சூதகக்கட்டு, உடல் கனம், கைகால் குடைச்சல், வயிற்றுவலி முதலியவைகளைக் குணப்படுத்துகிறது. அகாலப்பிரசவத்தைத் தடுத்துக் கர்ப்பமுண்டாக்குகிறது. அனுபவமானது.

புட்டி 1-க்கு விலை ரூ. 3-0-0.


ஏஜண்டு: S. பொன்னுச்சாமிபிள்ளை,
133 தும்பகொடா தெரு, பலாங்கொடை

(ஓ)

**மயிலப்பசாமி வைத்தியசாலை, பழனி S. I.**


கற்றோர்க்கழகு கசடற மொழிதல்


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE



நகைகள் கிடைக்குமிடம்
**எல். கே. எஸ்.**
**லெப்பை பிரதஸ்**
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
**நகை**
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



| திறமான | திறமான |
|---|---|
| **தேக்க மரங்கள்** | **ரூனிமார்க்ஓடுகள்** |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிறோட், யாழ்ப்பாணம்.

Std. 2


# திருப்பதிகம் பெற்ற திருத்திலதைப் பதி

## நற்சோதிகன் வழிபாடு

கோதாவரிநதிதீர போகவதி நகர் மன்னன். அன்பும் அறனுமே தனது வடிவமாயுள்ளோன். கிபதி மூறை ஆட்சியன். தேவவர்மன் என்பான், தருமசீலையாம் தனது பட்ட மகிஷியுடன் சஜ்ஜோதிகன், கோடிபதகன், முனிசிரேட்டன் வேதமித்திரன் ஆய தம் புதல்வர்கட்கு உரிய காலத்தே திருமணமுடித்து அரசுரிமையினையும் ஈந்து, வானப்பிரஸ்தம் சென்றனன். தவம்பல புரிந்து அறக்கிளத்தியருடன் இவ்வுலகம் துறந்தனன். அஃதறிந்த சஜ்ஜோதிகன் தந்தையாரின் ஈமக் கிரியை முடித்துப் புகழுற்றனன். அவ்வமயம், ஆகாச வாக்கொன்றே "சஜ்ஜோதிமன்ன! நீவிர் மிகப் புண்ணியவழிவீர். உங்கள் பெற்றோர்களது ஈமமுடித்தீர்; இனி செய்யும் பிதிர்க்கடனைச் செய்தற்குரிய இடம், தென்பால் காவிரி தீரத்துத் திகழும் திலதர்ப்பண புரியே ஆகும் ஆங்கு தென்புலத்தார் கடனைச் செய்திடின், செய்வோர்கட்கு திரிலோகேயேபிதிர்க்கள், திலநீர் பிண்டம் முதலியன ஏற்றாளி மகிழ்வர்" என அருளிச் சேதுவைநோக்கிச் சென்றனர்.

அவ்வழி உளக்கொண்டு இங்குற்ற சஜ்ஜோதிகனை காலவ மகரிஷி முன்தோன்றி ஆலயத்திற்கு அழைத்துச் செல்ல, சென்று வணங்கி ஆசிபெற்றனன். அவ்வாறே பிதிர்க்கடன் முடித்து இறைவழிபாடு செய்து அருள் பெற்றுத் தென்பால் தேவவர்ணேசன் உருவங்கண்டு வழிபட்டனன் பின் பலநாள் இங்குறைந்து வழிபாடு செய்திருந்து நாதர் ஆசி பெற்றுத் தனதுநாடு சென்றனன்.

## இறைவன் அந்தணராகி வருதல்

ஒருநாள் கர்த்தயாம பூசனை புரிந்து தனது (பன்னசாலை) இருப்பிடம் திரும்பிய ஆதிசைவர் ஒருவர்பால் அந்தணராய்த் தோன்றி அவரிட்ட அமுதுண்டு மகிழ்ந்தனர்.

## ஆலயம்

இது கிழக்கு நோக்கியுள்ளது. அழகிய சுற்றுப்புறத் திருமதில்களோடு திகழுகின்றது. இறைவன் முத்தநாதர். இறைவி பொற்கொடிநாயகி; தெற்குநோக்கியுள்ளனர். மேல்பால் விநாயகர் இராமர், இலக்குமணர் இவர்கள் தமித்தத் தருப்பணம் புரிந்து வழிபட்ட இலிங்கங்கள் நான்கும், முருகன் இலக்குமி வடிவங்களும், வடபால் சண்டேசர். திருவடிக்கீழ் மகிஷரும் பின்புறம் சிம்மமும் திகழத் திகழும் துர்க்கையும், கீழ்பால் நாலவர், நவக்கிரகம் சூரியன், சந்திரன், மூர்த்திதிருமுன நந்திதேவர், நந்திதேவர் பலிபீடம் விநாயகர் ஆகிய மூர்த்திகளும் உள்ளனர் ஆலயத்தற்கு வெளியே எதிரில் மேற்கு நோக்கிய ஆதிவிநாயகரும், வடபால் (தோப்பில் வீரன்) வீரன் தோப்பும் உள்ளன. தெற்கில் மாதவனேசுவரர், அழகனர், இலிங்கம், நந்திதேவரும் உள்ளனர்.

## தீர்த்தங்கள்

பிரமதீர்த்தம் அக்கினித் திக்கிலும், சக்கரதீர்த்தம் மேற்றிசையிலும், தேவிதீர்த்தம் (கிணறு) ஆலயத்திலுளும, மற்றும் வசிட்ட தீர்த்தம், மார்க்கண்ட தீர்த்தம், அரிசில்ம நதி தீர்த்தங்களும் உள்ளன.

## தீர்த்த விசேடம்

கார்த்திகைஞாயிறு, மாசி மாதம் களில் தேவிதீர்த்தத்தும், மார்கழியில் பிரமதீர்த்தத்தும, மாசியில் சக்கரதீர்த்தத்தும், வைகாசி பௌர்ணை விசாகநாள் வசிட்ட தீர்த்தத்திலும் நியதியோடு நீராடி உரிய மந்திரங்கொண்டு சிந்தித்துத் தியானிப்போரும், அமாவாசை முதலிய விசேட நாட்களில் தருப்பணம் புரிவோர்களும் விசேடமாய பயன்பெற்று மகிழ்வர்.

## தலவிருக்ஷம்

மந்தாரை. இதனைத் தாபித்தவர் உமையம்மையார். இது ஆலயத்துள் வடபக்கம உள்ளது.

இத்தலம் பூந்தோட்டம் புகைவண்டி நிலயத்திலிருந்து மேற்கே ஒருமைலில் அரிசிலாற்றின் தென்பால் உள்ளது. தற்போது சிதலைப்பதி என மருவியும, கோவிலபத்து எனவும் வழங்கப்பெறுகிறது.

—தருமபுர ஆதீனம்

# சைவ சித்தாந்த வகுப்பு

சைவமங்கையர் கழகத்தினரால் ஒழுங்குசெய்யப்பெற்று, சித்தாந்த சரபம் காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியர் அவர்களால் 10 நாள் சித்தாந்த வகுப்பு வெள்ளவத்தை சைவமங்கையர் கழகமண்டபத்தில் நடாத்தப் பெற்றது.

பிரசங்க முறையாகப் பாடம் நடாத்துவதற்கெடுத்துக்கொண்ட நூல், சைவசித்தாந்த சாத்திரங்களின் முதன்நூலாகிய சிவஞான போதம். சந்தானசாரியர்களின் வரலாறுகளையும் திராவிட மாபாடிய கர்த்தாவாகிய மாதவச் சிவஞான முனிவரின் வரலாற்றையும் முதல் வகுப்பில் சுவாமி அவர்கள் எடுத்துக்கூறியுள்ளார்; அதன்பின் மூதலாவதாகச் சமய உண்மைகளை நிலை நாட்டும் பிரமாணங்களை நன்கு விளக்கினர். இரண்டாவதாகக் கடவுள், ஆன்மாக்கள், ஆணவம், கன்மம், மாயை ஆகிய இவைகளின் உண்மைகளை நிலைநாட்டும் பிரமாணங்களையும் இப் பதார்த்தங்களின் இலக்கணங்களையும் எடுத்து இயம்பியுள்ளார், மூன்றாவதாக ஆன்மா முத்திபெறுவதற்கு உரித்துடைய பொருள் என்பதையும், அம் முத்தியைப் பெறுவதற்குரிய சாதனங்கள் இன்னவென்பதையும் எடுத்துக் காட்டினர். முடிவில் முத்தியின் இயல்பையும், சீவன்முத்தர்களின் தன்மையையும் எடுத்துக்காட்டினர்.

பாடங்களின் இடையிடையே பெரியபுராணத்தில் கூறப்பட்ட நாயன்மார்களின் சரித்திரங்களையும், 19ம் 20ம் நூற்றாண்டில் இருந்த சைவதொண்டர்களாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சபாபதி நாவலர், புலோலிக் கதிரவேற்பிள்ளை, சுன்னாகம் செந்திநாதையர், சோமசுந்தரநாயக்கர், திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் சுப்பிரமணிய தேசிகர் முதலியவர்களின் சரித்திரங்களில் நடந்த சில சம்பவங்களையும் உதாரணங்களாக எடுத்துக்காட்டியுள்ளார்.

# பிச்சை எடுக்கும் பேதைமை

1-ம் பக்கத் தொடர்ச்சி

## எளியார் திட்டம்

தற்போது தமிழ்நாட்டிலே தோன்றியிருக்கும் பிச்சைக்காரர் தொல்லை 120 ஆண்டுகளுக்கு முன் ஆங்கில நாட்டிலே இருந்தது. அதனை நீக்குவதற்குச் சார்லஸ்டிக்கன்ஸ் போன்ற அறிஞர்கள் நூலாலும் கவிதையாலும் பேச்சாலும் போராடினர்கள். எளியார் திட்டங்கள் (Poor Laws) இயற்றப்பட்டன. தற்போது பிச்சை எடுப்பது அந்நாட்டில் இல்லை. அது தண்டிக்கக்கூடிய குற்றமாகும். மேல் நாடுகளைத் தவிர நாகரீகம் பெற்ற எந்நாட்டிலும் பகிரங்கமாகப் பிச்சை எடுப்பது கிடையாது. பிச்சைக்காரர் தொழிற்சாலைகளும் அங்கே தோன்றி எல்லாருக்கும் வேலை தருகின்றன. நமது நாட்டில் இவ்வகைச் சட்டங்கள் இன்னும் செயல் முறைக்கு வரவில்லை. ஐந்து ஆண்டுகளாகச் செய்யும் முயற்சிகள் ஒரு சிறிதும் முன்னேறவில்லை.

## வெளிநாட்டவர் எண்ணம்

சில நாட்களுக்கு முன் சென்னை வானொலியில் ஒரு செய்தி ஒலிபரப்பப்பட்டது. கல்வர் வெளிநாட்டு இளைஞர்கள் சென்னையைப் பார்த்துவிட்டுத் தங்கள் எண்ணங்களை வெளியிட்டார்கள். அவர்களில் ஒருவர் கிழக்கு ஆப்பிரிக்கா நீகிரோ மாணவர். அவர் சென்னையில் கண்ட காட்சிகளைப்பற்றிப் பேசியபோது "இங்கே எந்த இடத்தில் பார்த்தாலும் பிச்சைக்காரர் தொந்தரவு சகிக்க முடியவில்லை. எங்கள் ஊர் சின்னது. ஆனாலும் அங்கே இந்த உபத்திரவம் இல்லை" என்றார். மற்றொருவர் பிலிப்பைன் தீவில் இருந்து வந்த ஒரு மாணவர். அவரும் அவ்வாறே கூறினர். அநாகரீகர் என்று நாம் கூறும் இந்த தேசத்தார்கள் நம் நாட்டு நிலைமையை இவ்வளவு கேவலமாகக் கூறினால் நாம் வெட்கப்படவேண்டாமா? இதற்கு என்ன செய்தோம்?

## தேகவியோகம்

கொழும்பு சம்மாங்கோடு கதிரேசன் கோவிலில் 17 வருடங்களாக அர்ச்சகராக இருந்தவரும் தற்போது முல்லைத்தீவைச் சேர்ந்த குமாரபுரம் சித்திரவேலாயுதசுவாமி கோவிலில் அர்ச்சகராக இருந்தவரும் ஆகிய பிரம்மஸ்ரீ. சா. அப்புலிங்கசிவாசாரியர் அவர்கள் (18-3-53) மாலை ஒரு மணிக்குச் சிவபதம் அடைந்தார் என அறிய வருகின்றது. இவர் சைவ சமயத்திற்காகப் பல இடங்களிற் சைவப் பிரசங்கங்கள் செய்து வந்தவர். பழனி சைவசித்தாந்த சரபம் பிரம்ம ஸ்ரீ. ஈசானசிவாசாரியர் அவர்களின் பிரதம சிஷ்யருமாவர்.

**மதிப்புரை**

விரும்புவோர் தங்கள்
புத்தகங்களில்
இருபிரதிகள்
அனுப்புமாறு வேண்டுகிறோம்.

ப—ர்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday March 24 1953.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org